672

# KARAIANTHATHI

BY

D. M. S. SULTAN ABDUL KADIR,

Tamil Pandit,

PORAYAR.

PUBLISHED BY

E. K. MARAICAR,

AKYAB.

PRINTED AT THE

MALA PRESS.

MAYAVARAM.

Q7:417
N15
171329

பிஸ்மில்லாஹி.

# காரையந்தாதி.

இஃது

பிறையாறு

ஸ்ரீமத் மு. செ. சுல்தானப்துல் காதிறு

அவர்களாலியற்றியது.

அக்கியாப்

கனம் ஸ்ரீ - மா - ஸ்ரீ

இ. காதிறுகண்டு மரைக்காயரவர்கள்

திரவியசகாயத்தால்

மாயவரம்:

கமலா பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1915.

Price: Annas 2.

# சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியரின் போதகாசிரியரும்

மதுரை தமிழ்ச்சங்க மஹா

வித்துவானும் தரங்கம்பாடி லுத்தர்மிஷியோன்

பாடசாலை முன்ஷியுமாகிய

பறங்கிப்பேட்டை

## ஸ்ரீமத் அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை

அவர்களியற்றிய

கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருவமர் காரைப் பதிதனி லமர்ந்து
    செந்நெறி தீனவர்க் களிக்குங்
குருபரன் மஸ்தான் குரைகழ றமக்குக்
    குருமணி மாலையந் தாதி
பருவா னீங்கப் பணித்தருள் செய்தான்
    பாடியாம் பிறைசைவாழ் செம்மல்
உருவமர் சுல்தா னப்துல்கா திறவா
    முயர்மொழி நாவலன் மாதோ.

# சிறப்புப்பாயிரம்.

காரைக்கால் தர்கா வித்வானும், இரங்கோன் சோலி யாப் பள்ளிவாசல் திரஸ்டியும், சோலிய முஸ்லிம் அசோசியேஷன் காரியதரிசியும் காரை மஸ்தான் காரண சரித்திரம், முஸ்லிம்கள் கவனிக்கத்தக்க வழி, சோலிய வரலாற்றுமாலை முதலிய பல நூற்களின் கர்த்தாவுமாகின்ற

## மிஸ்டர். ம. காதிறுகனி, M. S. அவர்கள்

கூறிய

ஆசிரியப்பா.

பூவுலகெல்லாம் புடையிருந்தென்ன
மேவுநன்மணி மேடைகள் குழீஇப்
பன்மணி சோதி பகலவன் போன்று
மின்னொளிகனன்றி விரவிருள்போக்கும்
இலக்கண க்ஷேத்திர மென்றெவ்வெவரும்
நலங்கிளர் நாப்பட நன்குரை பகர்ந்திடச்
சீரைப்பொருந்திய தேமலர்ச்சோலைசூழ்
காரையம்பதியில் கனவுபாத்தடைந்தவர்
நபிநாயகத்தி னற்பௌத்ரமாயில்
சுப இமாம் ஹுசைனின் தொன்முரீதடைந்தவர்
ஹலரத்து செயிதினா ஹாஜிஷா ஹலி
நல இமாம் திவான் மஸ்தான் செய்யிது தாவுது
புகாரி ஒலியுல்லா புண்ணியர்மீது
மகாவவதார முதலாய்க் கல்வி
நூற்பயிற்சியுட னுவலரும் ஹஜ்ஜு
யாத்திரை மந்திரி யலுவல் விவாக
மீறுத்த காரிய மாட்சிசேர் கனவு

# சிறப்புப்பாயிரம்.

நிருத்தம் வெளிப்பாடு நிறையுபதேசம்
பெறுமாறெண்ணிப் பிரபலக்குருவை
யுறுதியாயடைந்துப தேசம்பெற்றது
மழைபெய்வித்தது மருண்மனங்கொண்ட
தைக்கியா சாயபின் சந்தேகந்தெளித்தல்
மூங்கைப்பிள்ளையைப் பேசவைத்தது
வாங்கிய நாளை வளரச்செய்தது
காவலைக்கடந்து வெளியில் வந்தது
மாவிலை பஞ்சத்து வன்மை யொழித்தது
கப்பலில் வர்த்தகங் கண்டிடச் சென்றோர்
துப்புடைசொல்லைக் காராரணைந்து
மீப்புகழ்வாய்ந்த பெணுட்டாரால்
கேட்கலோனியிலே கேண்மைபெற்றிருக்கும்
சேதியையவ்வவர் திரண்டபந்தினர்க்
கோதியயக்கந் தெளியவைத்தது
கர்ப்பவேதனையைத் தீர்த்தது கடலிற்
கப்பலைக் கரையிற் சேர்த்தது மின்னும்
எல்லா வற்புதச்செய்கையு நன்றாற்
சொல்லவிரிந்ததுறை நூலாகப்
புந்தியுளோர்ந்துகா வை ஷாஹுலி மஸ்தான்
அந்தாதியென்றோர் நூலினையாக்கினன்
அன்னவன் யாரெனி னறைகுதுங்காரை
மன்னிய முஸ்லிம் பாலிய சங்கம்
என்னுந் தாயினுக் கெழிலவயமாய்
மின்னும் பத்தொன்பான் மெம்பர்களோடும்
சபை நடுநாயகம் முகையதீன் பாவா
உபயோக காரிய கரிசியுங் கஜான்ஜி
தகையலுவல்களைத் தாங்கிய கனவான்

## சிறப்புப்பாயிரம்.

முகம்மதுகோஸ் மரைக் காயரிவர்களுடன்
சங்கவித்வானுய்த் தங்கிய சிலாக்கியன்
சங்கைசேர் முத்துத் தாண்டவராயப்
பிள்ளையவர்க டம் பிரபலமாணவன்
தெள்ளிய தமிழ்க்கடல் சேரவுண்டவன்
நிறையாயென்று நிலவு மும்மாரிப்
பிறையாறு வந்த பெற்றிசேர் நிபுணன்
வல்லானிலக்கண வகைபைந்துணர்ந்த
சுல்தானப்துல் காதிறெனும் பெயர்
பெற்றவனிந்நூற் பெருமையைக் கொண்டித
னெற்றமடைந்தினி தோங்கிவாழ்குவீரே.

---

பறங்கிப்பேட்டை

மகா-ா-ா-ஸ்ரீ,

### G. முகம்மது கவுஸ்மிய்யான் சாகிபு அவர்களால்

இயற்றிய

கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

புகழ்தருங் காரை மீஸ்தான் புனிதரின் பிறங்கு பாதந்
திகழ்தர விளக்கி வையஞ் சிரங்கொளப் பெருமந்தாதி
இகழ்வற விசைத்தான் வேதவெழிற் கெழுமபிறைசை மூதூர்
மகிழ்வடை சுல்தானப்துல் காதிரா வாணரேறே.

---

# சிறப்புப்பாயிரம்.

பிறையாறு பஞ்சாயத்து

மகா-ள-ள-ஸ்ரீ

## மு· முகம்மது காசீம் மரைக்காயரவர்கள்

இயற்றிய

வெண்பா.

அட்டமுதும் பானு மருங்கனியுஞ் சர்க்கரையுற்
றிட்டமுறுஞ் சுவையுமே பதுக்காய் — அட்ட
திசைபு திக்குங் காரைத் திருவந்தா திப்பார்
மிசைமதிப்புக் கொண்டிருக்கவே.

கன்னற் கதலிக் கமுகுபூங் காவுசெறி
யன்னவயல் சூழு மருப்பிறைசை — மன்னவருந்
நீதிறமா வினபகவி வார்திசுல் தானப்துல்
காதிறு சொற்பாவிஃது காண்.

---

தரங்கை மளிகை வியாபாரம்.

## ஸ்ரீமந்· வீ· இருளப்பப் பிள்ளையவர்கள்

இயற்றிய

நெடிலடியாசிரிய விருத்தம்.

வானூரும் பொழிற்காரை யஸ்தானங்
குருபரன்றன் மலர்தாட்கன்பாய்த்
தேனூருஞ் செந்தமிழாற் கலித்துறையி
லந்தாதி சிறக்கச்சொற்றான்
பானூறு மின்னஞ்சொல் சொல்லென்பார்
கவிப்புலவர் பண்பின்மிக்க
மானூறு களறத்தேர் சுல்தானப்
துல் காதிர் மதிவல்லோனே.

---

# சிறப்புப்பாயிரம்.

பறங்கிப்பேட்டை

மகா-ள-ள- ஸ்ரீ

## கவு. கா. சுல்தான் அப்துல் காதிறு மரைக்காயர்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

பூக்கடன் மதனக் தேக்கிடமுகந்து
கருநிறவளிமுகில் தருதொனியிடித்துத்
தாரைமிறைக்க தேமழைசொரிந்த
இருசுடர்விளக்க மருவியமகளாய்
கடலினைத்துகிலா யிடையினிற்றரித்து
மலையினைமுலையாய் நிலைசிகர்ப்படைப்பத்
தாய்குண மணந்ததாய்ப் பொறுப்படையும்
தன்மையான்விளங்கு நன்மையம்புவியில்
வள்ளுவன்முதலாயுள்ள தொல்காப்பியன்
கம்பனோடுற்ற வம்பனையொட்டக்
கூத்தன்பண்டிதஞ் சாத்துகண்மாய்த்துப்
பண்ணைகள்செழித்த புண்ணியப்பிறைசை
வருபெருங்குலத்துத் தருக்கிளைப்பழுத்த
தேங்கனிமகுத்துவ மோங்குறுபுறுஹா
ஜைத்தீன்றவித்துப் புத்திரன்நவில
நீதிசேர்சுல்தா னப்துல்காதிறுபேர்
முளைத்தவெனன்பன் கிளைத்தடர்சோலைச்
செல்வநல்வேலி மல்கியக்காரை
நாயகர்ஷாஹுலி ஆயகம்மஸ்தான்
கருணையம்வேட்டிப் பெருமையந்தாதி
சொன்னயஞ்சுரக்க தென்னவன்வியக்கப்
பசும்பாற்பழத்தைக் கசிமதுசுவையைக்
கசப்புறச்செய்தநங் கிசைப்பினில்
புலமையிற்றெளிந்த கலைவலாரிடத்தே.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

பிறையாறு

## ஸ்ரீமத் வே. அப்துல் அஜீஜ் மரைக்காயரவர்கள்

இயற்றியது.

தருங்காரைந் தருநிதியாயொளி ரிருடிகளின்மதியரய்த்
தருவிந்தார்ரைப், பெருஞ்சாரை யதிசயிப்பானழைத்தவர்
தம் திருவினத்திற்பெருமையேய்ந்திங், கொருங்காரையக் க
ருணையுடன்விழித்து யடனழித்தாண்டுதவியாண்புற, றிருங்
காரை நகர்வதியுஞ் சாகலிப ஸ்தாமெஸலி யெம்மிறைவர்பீது.

சிந்தாதிங் கன்புறுமல்வரத்தாருந் தெருளருளுந் திரண்
டாருஞ்சீர், தந்தாதித் தனைநிகரப்புரந்தாரும் பரிந்து தினஞ்
சால்வேண்ட, வந்தாதி நூற்பலவாய்ந்தினிமை தரவியந்தறி
ஞர் மதிக்குமாற்று, லந்தாதி யொன்றெடுத்துத் திசைமுழுது
மிசைபலுக வரைந்தானன்றே.

தக்கமதிப் புடனிலகப்பாவாணன் யாவனெனிற் சாற்
றக்கேண்மி, னிக்கமதி புறுமுனையானருடனையான் வியலுல
வு மியல்வல்லோர்க்கு. சக்கமதி வணங்குலவும் மணங்குடிக்
கொட்குணங் குடிக்கோனடிக்கன்பாக, மிக்கமதி தருநோக்
கத் தருணேக்கமாலையதும் விளம்புநீரான்.

தானைக்காலவைகளுநாணீகையினர் வாகையினர்தழைக்
கும் நீலக், கூரைக்காலளி நயனத்திருவதியும் பெரும்
பதியாய்க் குலவுமந்தக், காரைக்கால ருண்முஸ்லீம் தங்களெ
ழிற் சங்கவயின் களிக்குமவித்வப், பேரைக்கமலம் பலசொற்
பட்டமது மிட்டமதும் பெற்றமேலோன்.

மாணவிய லெட்டுணையும் பயின்றணராதிவண்ணணைக்க
மதிக்குந்தூய, வாணரரும் புலவருயர்க்கலைஞரிசைக் கவிஞர்
களு வல்லோரென்ன, நாணமிலா தித்தகைநாமந்தமக்கே
தாப்புனைந்து மடிக்குமந்த, வீணிறுமாப் பொடிக்கித்தூய
டக்கிவைக்குமொரு வீரனன்றே.

# சிறப்புப்பாயிரம்.

என்னவியப்பென்பர்சில ரிவனறிவுமியலுங்கவி யிசைக்குமாண்பும், என்னவியப்பென்பர்சில ரித்தனையுஞ் சிறியனிவனெனவர்பாற்கற்றான், என்னவினவுவர்பின்சிலர் முத்துத்தாண்டவராய னென்றுடன்றுசொல், அன்னவன்மாட்டிவனை பலநூற்பயின்றபல னதனாலென் றறைவார்மன்னே.

மடக்கவிதை பிதற்றிவருந்தீப்புலவர் பொருமையினர் மதத்தைவாயை, யடக்கவிதை யெனுமரியப்பிரபந்தம் பலவியற்றி யளித்தனுப்பத்தே, நடக்கவிதை நிகரிலையென் றறிஞரிறும்பூதுசிறந் நயத்தோர்நான்கு. திடக்கவிதை சொலும்புலவர் செய்குபுறகாறைத்தீன் சேயதானேன்.

சிறையாறு கார்கொடுவண்டருந்தாதின் முகங்கிழிக்கச் சிதருஞ்சோலை, நறையாறு பாய்ந்துபயிரினம் வளரவளர்த்து வரும் நடுசோணாட்டுண், மறையாறு பயன்கெழுசீரெழுப்பாலும் விழுப்பாலுடை வயங் பொன்னூர், பிறையற வாழ்சுல் தானப்துல்காதிறுவென நற்பெயரினனே.

சீரையந்தாதித் தனைனவிலவுற்றிஞர்குழாந் தினங்கொண்டாடுங், காரையந்தாதியிஃது தச்சிறுவித்தகிலமுகங் கவினக் காட்டிப், பேரையந்தாதிகத் திணிலைநாட்டி ஞான்று முயற்பெருமைப்பூண்டேய், நேரையந்தாதிறத் தன்னவனைங்கின்னவனென்ன நிகழ்த்தக்கேண்மோ.

காதிருக்கண் டுவக்குமொருகாமனகர் காரையிற்சீர் கண்யமுநீங், காதிருக்கண் டிடஸ்தானெனிலிதறுகா நிலைவெள்ளிக் கபாடமிட்டோன், காதிருக்கண் டுயர்மொழியா ணிசுமாயிற்றம்பி மரைக்காயனீன்ற, காதிருக்கண் டுடமரைக்கா னென்ஞான்றும் வாழிநலங் கதித்துமாதோ.

விருப்புரையா ரகப்பொருளாய்த்தவமணியாய் மெய்ஞ்ஞான விளக்காய்ச்சோதித், திருப்புரையார் காரைநக ராண்டகையினமாண்டகைசீரிலங்குந்தூயக், கருப்புரையாரந்தாதியிஃதோது மன்பாளங் களிக்கவேசொற், பெருப்புரையாப் பெருமான் றன்றரிசனமுங்கரிசனமும் பெறுவார்மன்னே.

——(*) ----

# சிறப்புப்பாயிரம்.

பிறையாறு

ச. குழந்தைசாமி நாயகர் புதல்வர்

## மகா-ா-ா-ஸ்ரீ, மரியநாத நாயகரவர்கள்

இயற்றியது.

பூமணக்கும் பொழிற்பிறைசைப் புகழ்மணக்குந்
தின்குருவாப் புறகாறைத்தின்
கோமணக்குந் திருச்சுதனுங் குணமணக்கு
நன்டனத்தன் கோதில் வாணன்
பாமணக்குங் கவிவல்லோர் படிமணக்கப்
புகழ்ந்திடநற் பயனோர்ந்துய்யத்
தூமணக்குங் கலையனைத்து நனிமணக்குஞ்
சுல்தானப் தல்காதீறே. (1)

அத்திரமா ரடவிதனின் மித்திரனி
ளொளிவிளங்கா வதனைலன்னங்
குத்திரமோராவகையி னித்திய பாடணிகாலை
குறிக்கு மெய்யன்
பத்திரஞ்சே ரவர்தாட்கே பத்தியிளு
லசங்களித்துப் பகரந்தாதி
மூத்திரஞ்சேர் நலனடைவோர்க் கத்திரடா
யுறுமென்னின் மொழியர் பாற்றே (2)

துன்னமிலா விலக்கியவா ரீதியினிலே
விலக்கணமாந் துறை குளித்து
பின்னமிலா வந்தாதித் திரளமுமெதன்றெடுத்
திசைத்தான் பிறங்கு கல்வி
சொல்னயமும் பொருணயமு படிநயமுந்
தொடைநயமுந் துறைநயத்தோ
டெந்நயமு முறுப்புலவர் சிரமசைப்ப
ரெனிலினியென்னியம்பு மாறே (3)

# சிறப்புப்பாயிரம்.

செங்கமலத்தடம் பிறைநசை வாழ்சுல்தா
னப்துல்கா திறுவாம் வாண
பொங்கமல யலையமுனி தரங்கைமுத்துத்
தாண்டவன்பாற் புகழ்நூற் கற்றுப்
பங்கமல விருளகற்று கதிரவன்ஷா
கலியஸ்தான் பதுமத்தாட்குத்
துங்கமல ரெனுயலங்கல் புனைந்திட்டா
னதன்பெருமை தொகுப்பர் யாரே (4)

மறைவளரும் பிறைநசைநகர் சுல்தானப்துல்
காதிர்மகிப வுன்றன்
நிறைவளரு கல்வியெனு முத்தமிழாங்
கலைகடலைநிறைத்த ஞானி
உறைவளரு கவிஞர்சிரங் கொளுமுத்துத்
தாண்டவனே யுவந்தா னென்னில்
துறைவளருன் னூல்தனை யாப்புகழ்ந்து
கூறலொரு துணிபதாமோ (5)

நந்தையவர் சிந்துவிட்டுப் பசலேற
வழிதடுக்குநளிமாடஞ்சூழ்
விந்தையுறு காரைசுல் தான் சுதன்செய்கு
தாவுதுநபிபன் வேண்ட
சிந்தையுன வியற்றிடு மிந்நூல்தனக்கே
பொருளுதவிசெய்தான் போதின்
விந்தையுறை திருமார்பன் காதிர்கண்டு
மரைக்காயன் விரும்பினம்மா. (6)

பிஸ்மில்லாஹி.

# காரையந்தாதி.

## காப்பு.

திருவனந்தாதி வியப்பலங்காரந் தினம்பாவி
வருவனந்தாதிடும் பூந்துணர்க் காரைநம் வள்ளலுக்குத்
தருவனந்தாதி யியற்றியதற்குத் தனிமுதலாம்
ஒருவனந்தாதி யிலான்றுணை யென்றவுறதியினே. (௧)

## நபிகட்கிறைவர்.

ஒருக்கான் மழையழைத் தோம்பினர் நாவாயொதுங்குதுறை
யருக்கான் வளர்பதியுள்ளத் தமர்கழ லார்க்களிசேர்
திருக்கான் பொழிற்காரையந்தாதி யோதச்சிரம்பணிந்தேன்
புருசகான் மறையலங்காரர் செந்தாட்டுணைப் போதினுக்கே.

## கௌது நாயகர்,

மிகுதாது சிந்தலர்க் காரையந்தாதி விளம்பவனூர்
புகுதாது வெம்தழை மாற்ற வணங்கினன் பூங்குலைக்க
முகுதாதுடைவைப் புடைமல்கி விண்டோய் முகிற்றடுக்கும்
பகுதாது பள்ளிகொண் ணாயகர் சேவடிப்பங்கயமே (௨)

## ஒலிகட் பதிபர்.

நாகூர்வன சமலர்வாவிக் காரையந் நாதருக்கு
நாகூர்த்தமிழ்க்கவி யந்தாதிபாட நனிதொழுவேன்
நாகூர்வனப்பேசு வனமெவல்லார்தொழு நப்பிசெம்மை
நாகூர்த்தலத்தமர் நாயகர் தாண்மலர் நான்றினுமே. (௩)

## தரங்கேசர்

### நிரோட்டகம்.

சிரங்கைத் தணிந்தேத்தி நின்றனர்க்கல்லற் சிதையரிணைந்
திரங்கையர் காரையந்தாதியீ தாசித் தியற்றிடச்சா
கரங்கையலையா லணைக்காண் டனர்தங் கழித்திசையார்.
தரங்கைய தாட்சிசெய் யாண்டகைத்தாளென் றலைக்கணியே

## நூல்.

### கட்டளைக் கலித்துறை.

வாரணங்காரை வளர்த்துல கோம்பும் வகையிலருட்
பூரணங்காரை வனத்தவர் மேவப் புரிந்தவர்தாள்
பாரணங்காரை வெறுத்து மனனே பணியனந்த
காரணங்காரையிற் செய்தவ ரென்று களிப்புறவே (1)

களிக்குஞ்சரகட மாடப் பொருந்தினர் கண்ணிபரி
மளிக்குங்குமப்புயக் காரையெம் மான்வழி கண்டுணரில்
விளிக்கும்படியான் விடுத்தும றுள்ளம் வியக்கசலந்
தெளிக்கும் முகிற்குடை நாயகர்க் கண்டணிசீர்டரபே (2)

சீர்புகராவலை யீட்டபிரான்புகழ் தீனெறிக்குச்
சார்புகராசன நாமத்தர்பேரரென் சஞ்சலநோய்
நேர்புகராவளைப் பற்றுறு காரையினின்றனர்தம்
மூர்புகராவனை சுற்றீந் துறந்தென்னை யோம்புதற்கே. (3)

ஓம்பலையானெண்ணி வேண்டுமனுவெனக் கொன்றுளபற்
றும்பலையாத்துறவாகிய வுள்ளந் தளும்பலின்றி
சோம்பலையாணவ மாதியதீங்கைத் தொலைமினளி
யாம்பலையாட்டுந் தடம்பொழிற் காரையம் மாண்டகையே

ஆண்டலைக் குஞ்சுகண்டேயுஞ் சதிக்கண் டருங்கருடன்
தீண்டலைக்காட்டிச் சிறகாலணைக்குஞ் செழுந்தொடையல்
பூண்டலைக் குங்குமத் தோளீரப்பான்மை பொருந்திழிவின்
ஈண்டலையெற்குணர்த் திப்புகழ்க்காரை யெழுங்குருவே (5)

குருமுகந்தீர்த்தம் படும்பயிரென்னக் குணிக்கவினை
வருமுகந் தீர்பணிக்கேற்றவு மென்றுயர் மாற்றவுமித்
திருமுகந் தீட்டத் துணிந்தன னுன்றிருவடிக்கைந்
தருமுகந் தீங்கனிசிந்திடுங் காரைத்தலத்திறையே. (6)

தலம்பகங்கண்ட பெரியோர்க் கிணங்கத்தருக்கிவளைச்
சிலம்பகத்தாண்மட வார்க்குழல் வாயத்திருக்ககற்றக்
கலம்பக மந்தாதிக் காரேசர்க் கோதிக் கலுழ்ந்துருகிப்
புலம்பக மேயது நந்தி வினைச்சுட போமெரியே. (7)

## தலைவியிரங்கல்.

எரிக்குங் கொடிய மதியே புவியி லெவருமங்கே
கரிக்குங் கொடிமதிற் காரையம் வள்ளல் கழற்றொடக்கை
நெரிக்குங் கொடிச்சியென் பால்சுடுகின்றனை நீதியன்று
தரிக்குங் கொழுமை யிலார்மன மென்னவிண் சஞ்சரித்தே.

## இடமணித்தென்றல்.

சஞ்சலப் போக்கியெமையாளுங் காரைத் தயாளர்வெற்பின்
மஞ்சலங் காழி மணிவளை யாய்வரு வாய்வருந்தி
யஞ்சலங் கோடனை நின்குய மொக்கு மணித்துயர்மே[மே,
கஞ்சலங் கொட்டுநம் மூர்க்குன்று மெம்மூர்க் கங்குன்று

குன்றஞ்ச விண்டொட் டொளிர்காரை நாதர்தங் கோயிலி
சென்றஞ்சலித்துச் சிறப்படைவர்சிலர் சித்திரம்போல்[னுட்
நின்றஞ் சனவிழி மாஞர்குற்றேவ னிதம்புரியா
வுன்றஞ்ச மென்றுழல் வார்பலர் மூட வுடம்பெடுத்தே. (10

உடம்பட்ட வர்தொழு தேத்தச் சிறந்தன வொன்னலர்ம
குடம்பட்ட தின்வடுக் கொண்டு சிவந்தன குந்தளிசேர்
வடம்பட்ட வாசங் கமழ்ந்தென் சிரங்கொள வந்தனமுன்
தடம்பட்ட காரைத் திருக்கோயினர் சரணங்களே. (11)

சரணங்களைப்பற் றருந்தமிழ் வல்லீர் தருக்குமனத்
திரணங்களைந்தின்ப மல்குமெய்ஞ் ஞான விதங்கொடுப்பார்
கரணங்களைத்தற காரைப் பிரான்முன் கறைந்தெனதா
பரணங்களைத்தீர்க்கு மின்மருந்தீதெனப் பாடுமினே. (12)

பாடலங் காரம் படத்தமைத் தேடியப பாதகனை
நீடலங் காரண மாய்ப்பற்ற வேவிய நீதர்குலப்
பீடலங் காரம் பெறுங்காரை யீரடிப் பேணிபுகழ்ச்
சூடலங் காரந் தரித்தென்னை யாளுமின் சொந்த மென்றே.

சொந்த மலங்கெட மெய்ஞ்ஞான யோகச் சுருதிமுறை
தந்தயலன் றனை யோர்ந்தோன்று பட்டிடத் தண்ணளிசு
மந்த மலங்கொளுங் காரைமஸ்தா னெலி வள்ளல பதக்
கந்த மலர்க்கடி யாரன்றி வேறிலேக் கற்றவரே. (14)

கற்றவ ருப்பார்க் கிணையாவ ரென்றுரைக் கண்டொழுகா
மற்றவ ரும்விலங் கும்மொன் றெனச்சொலிவானர்தொழப்
பெற்றவ ரும்மல மற்றவ ரும்மிது பேதையனைப்
பற்றவ ரும்பிணி செற்றருங் காரைப் பதியண்ணலே. (15)

அண்ணாக்கு விக்க லெழும்படி காலனடுத் துயிரை
விண்ணாக்கு விக்க வருமுன்ன மேமன மேவிழைவை
எண்ணாக்கு விந்த மலநோயறுப்பா னிறைஞ்சியிரு
கண்ணாக்கு விந்தையங் காரைமஸ்தா னெலி காலிணையே. ()

காலிணைக் கண்ணிற் படவணங் காருட் கறைந்து விட
வேலிணைக் கண்ணியர்க் காட்பட்டு வீழ்வர் வியன்கடவுள்
பாலிணைக் கண்ணி படுகூபிரோர் விழு பாழ்நரகின்
மாலிணைக் கண்ணியர்க் காரைப் பிராற்கு மதிமருண்டே. ()

மதியாதவன் கணத்தாரகை விண்மண் மலைகடலும்
மதியாத வன்புகழ்க் கொண்டவனாகி மரலியுந்தா
மதியாதவன் னெனினும் முடிதாழ்ந்திவண் வம்மெனசம்
மதியாதவன் னிலைக் காரைமஸ்தானை வணங்குதற்கே.(18)

வணங்குஞ் சரவின் னுதல்விழி மாணார் மயக்கினுக்கிங்
கிணங்குஞ்சரம் விடுத்தீர் காரைநாதரிணை மலர்த்தாண்
மணங்குஞ்சரந் தனை யெண்ணாதுடலை மணிக்கருப்புக்
கணங்குஞ்சரந் திறந்தாலென்ன மோதலை யார்நிலத்தே. ()

நீலத்தாமரை நொடிநேரந் தொழுக நினைந்தனையேல்
நலத்தாமரை யொத் திடுவதல்லாற் றகை நண்ணவனஞ்
செலத்தாமரைக்கண்ணியர்க்காட்படுப்பெருஞ்சிக்கறுக்குஞ்
சலத்தாமரைத் தடஞ்சூழ் காரை நாயகர் தண்கழலே. (20)

தண்பட்ட தாமரை யன்னமுகங்க டயங்கமனப்
புண்பட்ட வர்க்குறை போமிடத்துக்குறி பொற்கமலை
சண்பட்ட தாளினர் காரேசர் வாழ்தரு காகலசம்
விண்பட்ட நாடொட்டடை பட்டுமீளுமிவ் வெண்மதியே.(

**நற்றுயிரங்கல்.**

மதிக்குந் தமிழ்க்குடை யார்தொழுங் காரை டகிபர் வெற்பர்
நதிக்கும் மழைக்கு நலிந்தழுப் பாலை நடந்திடனான்
குதிக்குஞ் சுடும்பரற்றுக்கும் வழிசென்ற கோதைநல்லாள்
பதிக்குந் தொறும் படுப் பாடென்னை யாமவட்பாதங்களே.

பாதகரந்தத் ததிட ணர்ந்துள்ளம் பரிவடை நூல்
ஓதகரந்தனங் காரைப் பிரானரு ளோங்கவென்று
மோதகரந்தலைப் புண்படும் மின்னிடை முன்னிலற்ற
காதகரந்தக் கணங்கொண்ட காமக்கருத்தெனவே. (23)

கருமஸ்தானத்து முளைத்துப் புவியோர் கறித்துப்பும்
பெருமஸ்தானத்துளிராய்நின் றவென்னைப்பிடுங்கிசெல்வர்
தருமஸ்தானத்துடன் சேர்த்தருள் செய்யுந்தவந்தருமெய்க்
குருமஸ்தானத்து விதங்கொண்ட காரைக் குணநிதியே (24)

நிதியாதவங்கைப் படக்காண்பரி தனை நோதமைத்
துதியாதவன்றனைக் காணுத காரைச் சுகுணரந்தாண்
மதியாத வன்றுடிருக் கோயில்வந்து வணங்கமனம்
பதியாத வன்னிலை யென்பதுகாண் புவிப்பற்றறவே. (25)

பற்றார்க்கெளையுடன் பாடாகச்செய்தப் பழவினைநூற்
கற்றார்க் கிணங்குபின் பேரருட்காளாய்க் கணித்திடுங்கொல்
பொற்றார்க் கிளர்மணி நாற்றியவாயல் புறமலநோ
யற்றார்க் கிடந்திறைஞ்சீங்காஸ்ர மன்ன வவைமுன்னரே.(26

முன்னுண்ட கையறநின்றானைத் தேற்றிட முன்றில்பலர்
மன்னுண்ட கைபிறையாற்று மஸ்தான்றிரு பாதலநின்
பொன்னுண்ட கைதரு க வினைக்கண்டு புகழ்புலவர்க்
கென்னுண்ட கைத்திடா பாபமு நேரயுமிருக்குங்கொலே.27

இருக்குஞ் சரக்கொடுங் கோட்டினை மானு மிளமுலையார்
செருக்கும் மயக்கும் படைத்தவர்களா லுயிர் செல்லநமன்
நெருக்குமுன் ஞானவரம்பெறக் காரை நிமிர்பொழில்சூழ்ந்
திருக்குந் தருகாபிரானெதி ரேந்து மிருகரமே. (28)

சரபஞ்சபர்க் களம்புக்கிய தென்னநீர்க் கண்வளர்கோ
புரபஞ்சலட்சண மாயி லெடுத்தேன் புதல்வனுக்கோர்
பிரபஞ்சலிக்க மொழிதந்த காரைப் பெரியவெற்குத்
தரபஞ்ச மற்றநல் வாழ்வெனப்பாடித் தமிழ்க்கவியே. (29)

கவிப்பவரா முகில் சூழ்தண்டலைக் காரைக் காலிறைமுன்
றவிப்பவராக பலரடிக் கென்றலை சாய்த்திலர்கா
குவிப்பவரலைக் கனியிதழுண்டு கொடுவினைசப்
பவிப்பவராவல் சூலான்மறந் தம்பர பாக்கியமே. (30)

பாக்கியமன்று ணடமாடுங் காரைப் பதிக்கிறைவர்
நோக்கியருட்செய வேண்டார்கண் மேனியினேயடர்ந்து
யோக்கியமற்றலை வாரலவோமதி யொண்ணுதற்கீழ்
வீக்கியமெய்க்குறை முல்லையர்தாளில் விழுந்தழுதே. (31)

மெய்தோட்டுப் பயிறல்

தேனார்வடஞ்சுமர் தாற்றுமணின்று திளைத்தவிடை
மானார்க்குழற்குந்தி யென்பழியேற்று மயங்குதிர்விண்
கானார்பொழிலிருந் தோங்கும் பிரான்காரைக் காலகத்து
வானார்தொழுங்கம லாசனங் கண்டிலை வண்டினமே. (32)

தலைவியிரங்கல்.

வண்டினங் கிள்ளை யனந்தரு கின்னும் வளிசுழல்வான்
விண்டின முஞ்சில தூதுவிட்டே னென்னை விண்ணுடனிம்
மண்டினந் தாருருக் காரேசர் நாட்டன்பர் வந்திலர்தேன்
கிண்டினற் றேறற் கசிந்திடும் பூங்குழற் சேகயமே. (33)

கயத்தானை கால்பற் றிடங்கர் வெருகைக் கரையிற்பற்றப்
பயத்தானையு மிந்தப் பாரிலென்றோதும் பழமொழிபோற்
செயத்தானை வேந்தர் தொழுங்காரை மன்னவன் சேவடியம்
புயத்தானை வெவ்வினைத் தீண்டாமற் றீண்டும் புலைஞரையே

புலையந்தரங் கனலூதை மண்ணீராற் பொலிந்தவிந்தச்
சிலையர்தரங் கணிமின்னுலகிரதைத் தேற்றமுத்தி
நிலையந்தரங்க முறுங்காரை வேந்தை நிரந்தரமும்
அலையந்தரங்க மெனப்பணிவீர் சிரமஞ்சலித்தே. (35)

சலித்தே யெனக்குறும் துன்மார்க்க சிலைந்ததனையொழிக்க
மலித்தேன் கமழ்கமலாசனர் காரை மதிப்புயர்ஷா
கலித்தேன் பதாம்புயந் தாங்கியுற்றேன் புகழன்பரெண்ணம்
பலித்தேன் வணங்கிலரோ முகிலார் குழற்பைந்தொடியே.

பைந்தொடியார்க்கும் புவிக்கும் பொருட்கும் பரிந்தபுலன்
ஐந்தொடுங்கும் மருந்துண்டது காரையதிபரெல்லாம்
வந்தொடித்தாங்கும் பெருமானிருந்தலை வாயறுடைப்
பந்தொடைக் குந்துகழலல்லாது வேறிலை பத்தருக்கே. (37)

தருக்கோட்டின் மாவடந்தொங்க விட்டாடுவான்றையலர்
னுருக்கோட்டிமண்டப நின்றருகாவிற்கு வந்துவந்தேர்[மின்
திருக்கோட்டுமென்று வணங்கிடு தாளிற் சிரம்பணியன்
பருக்கோட்டெடனை மதித்தாளுதிர் காரைப்பதிக்கிறையே.(38

பாங்கிதலைவனை வி[illegible]

இறையாழி வையப்புரந்தென்னை யாண்டரு[illegible]யாதே
மறையாழி யப்பொருளோர்ந்தவர் காரையம் மங்கைநுதல் [க்
பிறையாழினுண்மின்சொல்வேலிணங்கூர்விழிபின்னையென்ன
குறையாழி கையுடையாள் பொருட்டெண்ணுங்கொல் சொற்றவ
னே.

கொற்றவராக படிந்தவர் காதைக் குமுறுநகைப்
புற்றவராகங் குலுங்க மொழிவர் பொருட்கருதி
நற்றவராக வருங்காரை நாதவஞ்ஞானபல
மற்றவராகநும் மாண்படி சார்பறியாதவரே. (40)

ஆதவனங்கண் மலங்கமுன்செய் தெழிலச்சையொலி
வோதவன விருந்திட்ட ரதுபோலுவந்தெனக்கும்
நாதவனங் கொண்ணல் குரவாற்ற நறுவிழும்பூஞ்
சீதவனஞ்சூழ்ந் திருங்காரைக் காலமர்செய்யிதுவே. (41)

இதுதானருந்ததி யன்றிருத்தாடொழ திங்குவந்தேற்
பதிதானகப் பிணியாற்றுதலென்று பணிந்தனனல்
விதுதானழைத்திறை தூதெனத்தம்மை விளக்குமுகம்
மதிதானநாயகர் தீஞெங்கு காரையம் வள்ளலுக்கே. (42)

வள்ளுவ ரீரடிக் கீண்டிணை யின்றென வையகத்திற்
றுள்ளுவரிந்த மலங்கழீஇ யாவுந் துறந்தொருவன்
உள்ளுவர் காரை முதல்வர்தம் மீரடி யுன்னிதலைக்
கொள்ளுவரன்பவைசூடாமணிநகைகொளும்பித்தரே. (42)

பித்தனைப் பாட விடுத்துமெய்ஞ்ஞானப் பிரீதியினின்
பத்தனை வோரூர் தொழுங்காரை நாதர் பரிந்துகடு
கத்தனைப் போதருள் செய்யாதிருத்த லறுதிபரி
சுத்தனை யுள்ளுறவாடிய மாதவர் சோதனையே. (44)

சோதிக்க லாமெவ் வெவரெண்ண மும்பரி சுத்தமறை
யோதிக்க லாமது வுட்பொருளுஞ் சொலி யொன்னலரை
வாதிக்க லாமுத்தி போதிக்கலாம் மெய்வரமிகுந்து
சாதிக்க லாம்புகழ்க் காரேசரன்பு தழைத்தவரே. (45)

தலைவி கையுறையேற்றமை பாங்கி
தலைவற்குணர்த்தல்.

தழைத்தலைவைத் திரு கண்வைத்துக் கும்பத் தனத்தொடுபொ
னிழைத்தலை நீர்சிந்த தரங் கடித்தே யிருந்தனண் முன் [ன்
னழைத்தலை மீன்புசித்தார் காரைக்கான் மலை யத்தினிற்கூண்
மழைத்தலை வார்குழல் வேல்வலவாவுன் மனப்படியே. (46)

மனசஞ்சலம் பிணிநல்குரவெண்ணி மதுவிழிமுட்
பனசஞ்சலம் பட்டிளவாளை பாய்வயல் பண்ணளிசேர்
வனசஞ்சலஞ்சலங் கூங்காரைமன்னை மலங்கழியத்
தினசஞ்சலமற வாழ்த்தித் தொழலாற் றிருவடியே (47)

திரும்பாத வஞ்சகம் பொய்க்களவாசைத் தினம்பயின்று
வரும்பாதகர்க்கு மருளுண்டு செய்ய மணிக்கமலம்
அரும்பாதடம் புடைமல்கிய காரை யமலரெற்குத்
தரும்பாத போதிறைஞ்சும் பயனலித் தரையகத்தே. (48)

தரையகம் பாவம் படைத்தவர்க்கின்பந் தருநினதன்
பரையகம் பட்டழச் செய்யுமிதென் கொல்பனிமதியூர்
வரையக மேய்க்குந் திருக்கோயிற்கண் வளர்மன்னவதா
மரையகத் தாண்மனையாகிய காரைமகிபதியே. (49)

பதியோக மாதவர் நிர்த்தனஞ் செய்து பரிந்திறைஞ்சித்
துதியோது காரைப் பிரான்புகழ்ப் பாடார் சுழித்ததலை
விதியோவலது மதியோவுறுதி விளக்குமறை
நிதியோடு ஞானநிலைகெட்டு வீழ்வர் நெறிக்கயலே. (50)

அயலார் பனங்கரித் தின்னல்கொண்டேன் குறையாதரவிண்
புயலார் செழுங்கமு குங்கஞ்ச வாவியும் பொன்னனஞ்சேர்
வயலார் வளமும் படைத்துயர் காரையின் வள்ளலுக்குச்
செயலாருரையென்று வாடின வாக்குமென் சிந்தையுமே (51

சிந்திக்க நெஞ்சிலன் கண்ணிலன் காண்கைக்குச் சீரடியை
வந்திக்க கம்மிலன் நாவிலன் வாழ்த்திட பாங்கனியை
மந்திக்கரத்திற் கடுவனுக்கூட்டி மணிபொழின்மேற்
குந்திக்களிக் காரைக்கோனன்றிப் புல்லர்குருக்களையே.

குருந்தளித திண்ணலுறுத்தார் திருமலைக் கோன்பதிய
பருந்தளிரன்ன கரத்தொரு பாவை வணங்கமலர்
பொருந்தளித்தார் புயத்த ரெழிக்காரா புரத்திலெழுந்
திருந்தளிக் கொண்டவரல்லாதெற் கிங்கொருதிக்கில்லையே

திசகந்தரப் புவியி லூன்றிடத்தும் தினமருவிப்
புக்கநதரர்க்கும் பெறலரிதாம் மெய்ப்புலவருள
பொக்கந்தரங்கத் திரைவாய்த் துரும்பனையுள்ளலைக்குந்
துக்கந்தரங்களைந்தார் காரைவேந்தைத் தொழுந்தவமே.(54)

தவத்தவரைக் கண்டொழுகாதிறுமாந்து தழலிலிங்குஞ்
சவத்தரை வெந்து வலிப்பதுமானச் சனனமுற்றீ
பவத்தவரை மீதுயிர்ப் போழுனு மன்னைப் பயன் பெறற்கு
நவத்தரை மாகணர்க்காரை மஸ்தானநம்புமினே. (55)

நம்பித் தருந்துமிரை மலத்தோடு நரர்துதியாங்
குப்பித் தருந்துயர் மாற்றத் தொழுமின் குடவளையைத்
துப்பித் தருங்கவளம் மென்றெடுத்துசசுனை வெறுத்து
வெம்பித் தருத்தலைச் சாய்த்திடுங் காரை விடலையையே.(56)

விமலரைக் கொற்ற விநோதரை ஞானவிலோசனரை
நிமலரைக் காரை நிருபரைக் கெஞ்சி நெருங்கியபுன்
சமலரைக் காத்தருள் செய்யுந்தயாளரைச் சங்கைபதக்
கமலரைப்பாடார் புவிபெய்கிடுங் கொலிக்கார் முகிலே. ()

காரைப்பழித்த குழற்றிங்கள் வாண்முகங் காட்டியுயிர்த்
தாரைப்பறிக்கு மடவார்விரகத் தழலவிக்கும் [ரகைமின்
மேரைப்பணித் தெழும் வான்காரைப் பள்ளிகொண்மேற்
பேரைப்பயின்றிடையாதடி யார்க்கருள் பேரின்பமே (58)

பேரின்ப பானங்குடித்து மஸ்துண்டகின்பிரணவக்கண்
பாரின்பமுற்றவர்ப் பாற்பட வினைப்படுஞ்செயன்மும்
நீரின்படுங் கதிர் முன்பனியாகினினைந்திமைத்தாழ்
வோரின்பயனென்ன வாங்காரை நாயகவோதுகவே, (59)

ஓதனைத்தும்புக ழென்று தரித்தெனை யொன்னலர்செய்
வேதனைத் தீர்க்கு நகர்க்காரை நாயகவிந்தை திரு
மாதனைத் தம்மிரு பாதாம்புயத்து வணங்கி நின்ற
சாதனைப்பற்றிச் செந்தாமரையாளென்று சாற்றுவதே. (60)

தலைவியிரங்கல்.

சாற்றிக்கனை கொண்டெழுங்காம வெந்தீ தணிந்திடமன்
மாற்றிக்கனை கடன்முத்தங் கொழிக்கு மறிதரங்கம்
போற்றிக்கனைத்தும் வணங்கெழிற் காரைப்புனிதர்தொங்கல்
ஏற்றிக்கனை தந்திடுங் கொலெற்காவி யிருந்துய்யவே. (61)

இருமத்துக் குட்பட்டலை தயிரென்ன விடைந்துமன
வருமத்துக்கும் பிணிக்குமயர்வேற்கு மழைமுகினேர்
தருமத்து கைகொடுத்தாண்மின் கண்டிருந்தலத் தழுதுப
பொருமத்துயரகன்றே னென்னக்காரைப் புரந்தரசே. (62)

புரந்தரங்கை கான்மலைமுகிற்கு தெனப்புல்லர்களை
நிரந்தரம்பாடு மறிவிலிகாளென்னிணம் வளர்க்க
விரந்தரங்காது விரும்பினுந்தேய்ந்தினி யேனுமுயிர்க்
கரந்தரங்கா முன்கங்காரேசர்க் கோதுங்கவிப்புகழே. (63)

கவிக்குங் கனங்குடை செய்தவர் பார்க்கங் கடிகுபிர்வந்
தவிசகுங் கதிரவன் ருனென்றெழுந்திது வண்டமுதற்
புவிக்குங் சரந்தழ கோங்கியக் காரைப் புனிதர்புகழ்ச்
செவிக்குங் களிக்குமனங் காயவாக்கினுந் தித்திக்குமே. (64)

### நற்றயிரங்கல்.

தித்திப்புறுந் திருநாமம் படைத்தவர் தினவர்க்கு
முத்திப்புவனத் தளிப்பவர் காரை முதலவர்மேற்
சுத்திப்புரைகளத்தாள் கொண்ட காதற்றுயரெழுப்பக்
கத்திப்புலம்புவதா லென்செயுங்கொல் கறைந்தன்றிலே (65)

அன்றிலப்புக்க வெனையாண்டு நல்லருளஞ்சுமனங்
குன்றிலனென்னக்குறித்துச் செய்தீர் சிறக்குந்தருகா [ம்
முன்றிலன்பார்ந்தெழிற்காரேசவென்று நின்முன் வணங்கும்
ஒன்றிலனுகிலந்தோவருந்தீங்கை யுரைக்கரிதே. (66)

உரைக்கா வதஞ்செல நன்மையில்லாதுலர்க் குன்னியருள்
துரைக்கா வதமென்னத்தந்து நின்றீர் சுரர்தம்முலகின்
விரைக்கா வதப்படிலென் குறையென்று வியந்திருப்ப
வரைக்கா வதனமலர்ந்திடக்காரை வருந்திருவே. (67)

திருமங்கலந்தரு மானந்தக் காரையில் தேவருக்கும்
மருமங்கலந்த பனைப்புகுந்தாரை வழுத்திவதென்
உருமங்கலந்த கர்ப்போன் மதுபானரை யோதவெபயர்
பெருமங்கலந்தலைக் கொள்வீர்மஸ்தானென்று பேதலித்தே

பேதமலங்களைப் பூண்டாடுவார்க்கன்றிப் பேசிடத்த
காதமலங்களைப் போக்கிடப்பெய்முகிற் கண்வளர
வேதமலங்களைத் தர்திடுங்காரை யிறைவர்புகழ்
ஓதமலங்களைச் சார்க்கிடம்பாவவுலகல்லவே, (69)

உலகுடம்பால் வருவார்க் கின்னனீக்கி யுலையகதி
பலகுடம்பால் குடித்தாலென்ன போதம்பணிச்சிலைதவு
விலகுடம்பால் விளங்குங்காரைநாதர் விரும்பினமைம்
புலகுடம்பால் வருத்தாதகமே மருள்பூத்திருக்கே. (70)

பூத்தர்பணஞ்செயும் வான்பொழிற்காரைப் புராதனர்க்கு
மாத்தற்பணந்தரந் தாண்மன்னரும் வறுமையினில
நீத்தற்பணம் புகுவாருமொன்று மூனிரப்புடலங்
காத்தற்பணம் படைத்திருமைப் போலன்றுகண்குருடே. 71

குருமான் பிறக்க வருந்தியடாது குணப்பெறுஞ்சீர்
திருமான் வளர்ப்பதியாகியக் காரையிற் செய்தவர்பண்
டொருமான்றுய ரொழித்தார் குலமென்னிலுரைக்கரிதப்
பெருமான் நமைக்கருதாததீ காஞ்செய்ப் பெரும்பிழையே.

பிழையொன்றிரண்டுப்பொறுத்தருள் செய்யப்புகாவிடிலென்
னுழையொன்றுபுன்மை யெவர்க்களேவார் மதியூர்வரைவாய்
மழையொன்றுகாரை பணிதராகாவின் மகிழ்புகரா
நுழையொன்றுபட்டபின்னீத்துவந்தீர்பல நூன்முறையே (73

நூலாதரஞ்சொலி மூடர்க்குணர்த்திட நுண்ணறிவை
யேலாதரங்கொண்ட நாயேற்குதவி யியற்றியிவன்
பாலாதரஞ்செய நாமெனக் காரையிற் பங்கயசெங்
காலாதரங் கடிந்தாண்டருள்வீர் கடைக்கண்கணித்தே. (74)

கண்டலை வாய்செவியார் பயனென்முக் கனியுதிர்பூந்
தண்டலை சூழ்திருக் காராபுரத்தண றம் புகழை
விண்டலை யென்னத் தொழுதருட்கேளா விதிவசத்தான்
மண்டலை வந்துபிறந்திறக்குமிந்த மானிடர்க்கே. (75)

மானிடர்க்கஞ்சி வழக்கோரபேசிய வம்பநீமுன்
ஆனிடர்க்கண்டு திரும்பினர்க்கொண்ட வருட்கலிபா
தீனிடர்ப்போக்கிய காரேசர் தீட்சைசெயக்கருதா
தேனிடர்க்காளா யிருந்தலைர்தாயிவ ணென்றைக்குமே. (76)

என்று விருப்பிப்புரவீரெனக் கருளெய்தவினைக்
கொன்று துறந்திடர் நீத்தமெய்ஞ்ஞானக் குரவர்சூழாம்
நின்றுபணிந்த நின்காராபுரத்தை நெருங்கிவந்து
வின்று கரங்குவித்தேன் மனவாக்கினு மின்புறவே. (77)

இன்புறச்செய்தவினை யொழிந்தோமிலை யென்றிழைக்கப்
பின்புறங் கூனிவருபவர்க் காரைப் பெருந்தகைமுன்
அன்புறவெல்லாந் துறந்தனமானுட்மை யன்றியென்னில்
தன்புறக் கண்கணித்தாண்டருள் வாரீது சத்தியமே. (78)

சத்தியவாக் கருள்செய் தடிமைக்குறுஞ் சஞ்சலம
கத்தியம் போக்கியருங் காரைநாதவெக் காலமுமோர்
நித்திய மெய்பரனேவலைமீறு நெறிமுறையின்
முத்தியதாம் வழிகாட்ட னினக்குமுதற்கடனே (79)

முதுமறுக்கம்மினுமென் புவிமன்னர் முடிபணிந்தங்
கதுமறுபட்ட செந்தாளழகா வருமாதுலனூர்து
ததுமறுபட்ட நாக்குண்டாக்கு நின்புகழ் தன்னைபின்னர்
எதுமறுத்தானு மறக்கேனைப்பற்றி யிருப்பதுவே. (80)

இருந்தேவர்கட் பணி நின்றிருமேனிக் கிடர்விளைக்க
வருந்தேவதைதனை விடுதவராக்கி பலைபெருமாள்
திருந்தேவல் கொண்டமர் காரேச பர்பலதீங்ககற்றும்
மருந்தே வழங்கிபின் பாற்றிடுவீர்சிறு வன்பிணியே. (81)

பிணித்தலையாகின்ற மும்மல நெஞ்சப் பிசாசதனைத் [ரவம்
துணித்தலையானெண்ணி வேண்டுகின்றேன் விடந்தோய்ந்த
மணித்தலைத்தாங்கும் புவியினின்னன்பர் மனத்தையொக்க
வணித்தலைத்தாந்தட நீராடைக் காரைக் கதிபதியே. (82)

அதிபதிக்கும்புவி வானகமுந்தின மஞ்சலித்துத்
துதிபதிக்குந் திருக்காரை வந்துய் மைத்தொழுதவருழ்
விதிபதிக்குங் கருதர்கன்பராகி விரைந்தலைபாய்
நதிபதிக்கும் பெரிதாகிய வாழ்வினை நண்ணுவரே. (83)

நண்பார் வருந்தன் மனப்பொறுக்காம னணுகிவந்து
கண்பார்த்த ருளிறைவாழ் பதிவேட்கிற் களிஞிமிறு
பண்பார்ப்புடன்கே கயமாடப்பாடிப் பயிற்றுடவை
விண்பார் தொழுங்காரைக்காலென்று சொல்லிவிளம்புகவே

விளம்பரிதாகிய நின்புகழ்ப்பாடி வியந்துவியந்
துளம்பரியா திற்குமென்குறைமாற்ற லுனக்குகடன்
தளம்பரிசூழ் புவிக்காத்தீர்ட பந்தனையமைத்தீர்
வளம்பரிசுத்தம் பெறுங்காரைக்காலமர் மன்னவரே. (85)

மன்னவருட் டுயரெண்ணு னின்று வலைபடுமா [ந்
னென்னவருந்திவை யேநெஞ்சமே யெண்ணிறந்தவர்தாழ்
தின்னவருந்துணை செய்தநங்காரை புதாரிசெய்ய
பொன்னவருந்துதி பாதாம்புயமென்று பூணுவையே. (86)

பூணிலங்குந் தனத்தார்சொற்கிணங்கிப் புனிதர்பணிக்
காணிலங்குமிங்கு மோவெர்கன்றி முகங்கருகச்
சேணிலங்குந் திருக்காரை யெம்மான்றொண்டுசெய்பவர்தம்
வீணிலங்குந்தி யெதிவேனும் வேண்டிச்செய் வித்திடரே.(87

வித்தகம் பன்னிய மெய்வாசகந்திரை வீசுகடல்
புத்தகம் பன்கவியென்று பிதற்றுவ ரோங்குபரி
சுத்தகம் பற்றிய காரைப்பிரான்றுதியற்ற வெறும்
புத்தகம் பார்த்திடர் பட்டுழலுஞ்சில புன்மையரே. (88)

புன்னுவியந்த வெறுஞ்சமயத்தைப் பொருந்திநின்று
தன்னு வியந்தகற்காம் பொழுதென் பயன் தஞ்சமென
பொன்னு வியந்தருங்காரேசர் பாதாம் புயத்திற்சிரந்
துன்னு வியந்தரம் போலலைவார்க்குடல் சோர்தரவே. (89)

தரவந்தனைத்தன மெற்கென்றணைத்துத் தழுவிநிதம்
அரவந்தனைப் பொருவல்கு னல்லார்க்கிங் கழிந்தனமால்
சிரவந்தனைச் செய்தருங்காரை வள்ளற்றிருவடியைப்
பரவந்தனை மறந்தாபாசாமுற்றென் பணத்தக்கதே. (90)

தக்கணஞ்செய்ய வருங்காரை நாதரைச் சார்ந்திடப்பூ
தக்கணத் தீங்கனைத்தும் வைப்பனைத்துந் தவிர்ந்துடலந்
தக்கணமே செழிப்பாமெனிற் சென்று தணிவர்கண்டந்
தக்கணஞ் சத்தத்தராதலங் காக்குஞ் சலக்கடலே, (91)

கடவாரணத்தெழுஞ் செங்கதிரென்ன கலைமுறைபோல்
நடவாரணந்த வருங்காரை வள்ளனகைத்துவர்வாய்
மடவாரணத் துரைக்கின்புறுவோர்க்குண் மயங்கிசெவி
சுடவாரணத் தந்தமோதுவர் தம்மைத்துதிப்பவர்க்கே. (92)

துதிப்பரவந்தனை யகற்றி ரெனின்முன்றுயரோடுசந்
நிதிப்பரவந்த ணன்றுங்பொழிக்கர் வெண்முடக்கெயிற்றுக்
கதிப்பரவந்த லத்தாங்தம்புவி மெய்க்கருதசிரம்
பதிப்பரவந்த ரைக்கேன் காரையன்ன பராமுகமே. (93)

முகந்தத்தைச் சொல்லியர்க் கம்புயமென்று முயங்கிதனச்
சுகந்தத்தைக்கொண்டவர்காதொழு மின்னருடெய்க்கும்வனப்
பிகந்தத்தையைக் கடிங்தோட்டி வெருவப்பிளிரிதிக்குத்
திகந்தத்தை வாழ்விக்குங்காரை யெம்மான்செய்ய சீரடியே ;

## தூதுவிடுதூது.

சீரங்கத்தாரைத் தராவிடி னுவிசிதையுமென்று
நாரங்கத்தாரை வனக்குருகிர் சொல்லுகற்றவங்கள்
சேரங்கத்தாரைப் புரந்தவர்க்காரை செழுஞ்சிலம்பின்
கூரங்கத்தாரை யடைக்கும் படைக்கர கோமகற்கே. (95)

மகரந்தஞ்சிந்து மலர்க்காவனம்புடை மல்குமலைச்
சிகரந்தணி தருகாவமர்க்காரைத் திருக்கடைக்கா
முகர்ந்தநோயு மடமையுமாற்றி நன்முத்திதரும்
நகரந்தம்மாண்ட தைதாதொழுங்கான்மனு நாமத்தரே. 96

நாமத்தரங்கங் கடைந்சமுதாகிடு நாற்கவியுங்
காமத்தரங்கங் கடந்துபிரான் காரைக்காலினுக்கு
போமத்தரங்கம் புளகித்திடப் புகன்மின்புலவீர்
தாமத்தரங்க ளோந்தம்பர வாழ்க்கை தரும்படியே. (97)

படியமலங் கொண்டெழுங் காரைநாதர் பகைவருள்ளம்
ஒடியமலங்கி வருமந்தகர்கிரு ஞானவிழி
விடியமலங்கூன் மலரெனத்தந்த மகிமையென்னேய்
மடியமலங்கழீஇ வைப்பதும்விந்தைகொண் பாநிலத்தே (98)

நிலங்காது சிந்தனிலம்பட்டலைகல நீ வன்விழிக்
கிலங்காது விர்மணித் தீபம்பொருத்தி யிதைக்குறித்து
கலங்காது வம்மெனச் சொல்லியக்காரைக் கருணையர்நாம்
மலங்காது செய்வினை விட்டொழிக்கார் கொண்டடநெஞ்ச
[மே

மடவைதிகர் பிடிவாதமனத்து மவுட்டிகர்தங்
கடவைப் பொறுத்தருட் கண்கணித்தாண்ட புகாரியென்று
திடவை வளங்கெழுங் காரையெம்மானை தொழுநமதுள்
வடவையழியப் பருகுவம் பேரருள்வாரணமே. (100)

## காரையந்தாதி

முற்றிற்று

7B
2-126